**1968 ஆகஸ்ட் 28]** [திரு. இரா. நெடுஞ்செழியன்]

இப்பொழுது லுங்கி வியாபாரம் நல்ல முறையில் இருக்கிறபடியாலும், நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைகொடுக்கப்படுவதாலும், லுங்கித் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரு நெசவாளியின் மாத வருமானம் ரூ. 75 முதல் ரூ. 100 வரையிலுள்ளது. லுங்கி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு முன்பைவிட இப்பொழுது அதிகமான அளவில் லாபம் கிடைத்துவருகிறது என்ற அடிப்படையின் பேரிலேயே இந்த நெசவாளர்கள் கூலி உயர்வு கேட்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர் என்பது தெரியவருகிறது.

### (3) இராதாபுரம் துணை வட்டத்தில் பருவ மழையின்மையும் பஞ்ச நிவாரண வேலைகளும்.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் துணை வட்டத்தில் தொடர்ச்சியாக பருவமழை தவறியதால் கிணறுகளில் தண்ணீர் இன்றி வறட்சி ஏற்பட்டு வேளாண்மைப் பெருங்குடி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு இருப்பதால் அவர்களுக்கு உதவி செய்யும் வகையில் பஞ்ச நிவாரண வேலையை ஆரம்பிக்கவும், அவர்கள் அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய கடன் வசூல்களைத் தள்ளி வைக்கவும், நஞ்சைத் தீர்வையைத் தள்ளுபடி செய்யவும் வேண்டியது பற்றிய அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பிசானப் பயிர்ப் பருவத்தின் போது வடகிழக்குப் பருவமழை பொய்த்துவிட்டதன் காரணமாக, திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் துணை வட்டத்திலும், பிற வட்டங்களிலும் பயிர்கள் பாதிக்கப்பட்டன. குறிப்பாக இராதாபுரம் துணை வட்டத்தில் மழை பெரிதும் தவறிவிட்டதால் அங்கே பெரும் பகுதிகளில் நஞ்செய் பயிர்களும் புஞ்செய் பயிர்களும் சாவியடைந்துவிட்டன. வருவாய்த் துறை வாரிய 13-ம் எண் நிலையாணையின் கீழ் நஞ்சை நிலங்களுக்கு நில வரித் தள்ளுபடி வழங்கப்பட்டது. மேலும், நஞ்செய் நிலங்கள் மீதான நடப்பு நிலவரி வசூலை 1378-ம் பசலிக்கு ஒத்திப் போடவும் அனுமதி வழங்கப்பட்டது. நடப்பு ஆண்டில் கடன் தவணைகளை மெதுவாக வசூல் செய்யும் கொள்கையைப் பின்பற்றுமாறும் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, கடந்த மார்ச் திங்களில் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு தீர்மானம் கொண்டுவந்தபோது, ராதாபுரம் பகுதியில் நிலத் தீர்வையைத் தள்ளுபடி செய்யவும், பஞ்ச நிவாரண வேலைகளுக்காக ரூ. 5,30,000 அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் சொன்னார்கள். நாளது தேதி வரை அங்கு மழை பெய்யாத காரணத்தால் கூடுதலாகப் பஞ்ச நிலை ஏற்பட்டு இருப்பதால் பஞ்ச நிவாரண வேலையை உடனடியாக ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தற்போது நிலத் தீர்வை தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. பஞ்ச நிவாரண வேலைகள் எந்த அளவு செய்யப்பட்டு வருகின்றன, இன்னும் எந்த அளவு அனுமதிக்கலாம் என்பது மாவட்ட அதிகாரியின் விரிவான அறிக்கையின் பேரில்தான் மேற்கொள்ள வேண்டும். அந்த வகையில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வது அவசியம் என்று கருதப்பட்டால் அரசாங்கம் யோசிக்கலாம்.

### (4) திருச்சி மாவட்டத்தில் மர்மத் தீ விபத்துகளினால் ஏற்பட்ட சேதங்கள்.

**திரு ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, கடந்த மூன்று வார காலமாக திருச்சி நகர்ப்புறங்களிலும், திருச்சி மாவட்டத்தில் கிராமப் பகுதிகளிலும் பரவலாக மர்மத் தீ விபத்து ஏற்பட்டு வீடுகளும் வைக்கோற்

போர்களும் தானிய சேமிப்புகளும் சேதமடைந்து உள்ள நிலே பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலேவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 14-6-1968 முதல் 14-8-1968 வரை உள்ள காலத்தில் 11 தீ விபத்துக்கள் ஏற்பட்டன. அவை பற்றிய விவரங்கள் கீழே உள்ள பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன. இத் தீ விபத்துக்களின் விளேவாக 12 பேர் உயிரிழந்தனர். நிவாரணத் தொகை ரூ. 46,840 வழங்கப்பட்டது.

| தீ விபத்து நடந்த தேதி. (1) | இடம். (2) | வழங்கப்பட்ட நிவாரணத் தொகை. (3) ரூ. |
|---|---|---|
| 14-6-1968 | சினுப்பானூர் கிராமம், அரியலூர் தாலுகா. | 7,320 |
| 24-6-1968 | திருவரம்பூர் கிராமம், திருச்சிராப்பள்ளி தாலுகா. | .. |
| 26-6-1968 | மேலரசூர் கிராமம், லால்குடி தாலுகா | 10,000 |
| 10-7-1968 | ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி தாலுகா | .. |
| 14-7-1968 | பெரியார் நகர், வருகனேரி கிராமம், திருச்சிராப்பள்ளி தாலுகா. | 12,440 |
| 16-7-1968 | வையம்பட்டி கிராமம், மணப்பாறை தாலுகா. | .. |
| 19-7-1968 | புத்தூர் h/o ஆண்டிபட்டகாடு, அரியலூர் தாலுகா. | .. |
| 24-7-1968 | மேட்டுப்பட்டி கிராமம், லால்குடி தாலுகா. | 8,720 |
| 27-7-1968 | கணக்கப்பட்டி கிராமம், கரூர் தாலுகா. | .. |
| 14-8-1968 | திருமலப்பாடி கிராமம், அரியலூர் தாலுகா. | 6,040 |
| 14-8-1968 | அழகாபுரி கிராமம், துறையூர் உபதாலுகா. | 2,320 |

**திரு. ஆர். கருப்பையா :** இந்த எரிந்துபோன வீடுகளேக் கட்டிக்கொள்ள அந்த விவசாயிகளுக்கு 2,000. 3,000 ரூபாய் கடனுக, ஐந்து வருடத் தவணேக் கடனுக குறைந்த வட்டியில் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் ஏற்கனவே இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். ஹரிஜன மக்களேப் பொறுத்த வரையில் ரூ. 300 வட்டியில்லாக் கடன் கொடுக்கப்படுகிறது ஒரு நபர் ஜாமீன்மீது. தக்காவிக் கடன் என்ற முறையிலும் வாங்குவதற்கு வாய்ப்பிருக்கிறது.

## 5. தன்னிலே விளக்கம்.

### திரு. க. இராமமூர்த்தி ஆற்றிய உரையில் திருத்தம்.

**மாண்புமிகு பேரவைத் துணேத் தலேவர் :** திரு இராமமூர்த்தி அவர்கள் ஒரு விளக்கம் அளிப்பார்கள்.

**திரு க. இராமமூர்த்தி :** இந்த அவையின் அனுமதியோடு 24-8-1968 அன்று நான் பேசியபோது சொல்லிய விவரங்களில் ஒன்றிரண்டைத் திருத்திக் கொள்ள விரும்புகிறேன்.

சேலம் மத்தியச் சிறையில் ஒரு கைதி இறந்ததேதி 8-8-1968 என்று சொல்லியிருந்தேன். அதை 6-8-1968 என்று திருத்திக்கொள்ள வேண்டுகிறேன். அந்தக் கைதி செங்கல்பட்டு சப் ஜெயிலிலிருந்து சேலம் மத்திய சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகச் சொல்லியிருந்தேன். செங்கல்பட்டு சப் ஜெயில் என்பதை சைதாப்பேட்டை போலீஸ் நிலயம் என்று திருத்திக்கொள்ள வேண்டுகிறேன்.